**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 165 /2024**

**Dated: 07.01.2026**

**Deposition of Witnesses for PW -2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. காளிமுத்து | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரிகள் ஆஜர் .மனுதாக்கல் செய்யபட்டு அனுமதிக்கபட்டது.** இருதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verfied with their identity card. Aathar card of the Witness verfied.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது திருச்சி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.01.2024 ம் தேதி நான் பணியில் இருந்தபோது எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் காவல் நிலைய அலுவலில் இருந்த நான் மற்றும் மு.நி.காவலர் திரு.அழகேசன் அவர்களுடன் 12.45 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்களிடம் இரவு ஹவுரா to திருச்சி வரும் ரயிலில் கஞ்சா எனும் போதைப்பொருள் கொண்டு வருகிறார்களா என்று சோதனை செய்ய காவல் ஆய்வாளரிடம் முன் தகவல் கடிதம் எழுத்து பூர்வமாக

கொடுத்து அனுமதிபெற்று 1.00 மணியளவில் நானும் மேற்படி காவலரும் அரசு உபகரணம் மற்றும் மெடிக்கல் கிட் எடுத்து கொண்டு அரசுக்கு சொந்தமான TN22G0331 TATA Specio திருச்சி காவல் ஆயுதப்படை காவலர் 2162 திரு.சந்திரகாசன் வாகனத்தில் ஓட்டுனருடன் திருச்சி ரயில்வே ஜன்சன் சென்று அங்கு RTO காவல் நிலையத்தில் ரயில் சோதனை செய்வதற்கான கேட்டு கொண்ட போடு SSI செல்வராஜு மற்றும் காவலர் 0811383 திரு.பிரபு ஆகியோர் உதவியுடன் நடைமேடை 2 ல் 2.20 மணிக்கு வந்த ஹவுரா திருச்சி ரயிலில் இறங்கி வந்த பயணிகளை சோதனை செய்தோம்.பின்பு 5.50 மணிக்கு திருச்சி ரயில்வே ஜங்சன் சுரங்கபாதையில் சோதனை செய்தபோது சந்தேகத்தின் பேரில் 2 நபர்கள் கருப்பு நிற சோல்டர் பேக்கை கொண்டு வந்தவர்களை விசாரணை செய்ய முன் வந்த போது சந்தேக நபர்கள் இருவரும் ஓட முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரணை செய்த போது மாரியப்பன் வயது 51/2026 த/பெ ராஜகோபால் கதவு எண் 55, செம்மொழி தெரு, ரெட்டியாபட்டி , திருநெல்வேலி மாவட்டம். மற்றும் முத்துகுமார் வயது 32/26 த/பெ திருகுடையார் ரெட்டியாபட்டி திருநெல்வேலி மாவட்டம். என்பவர்களை நிறுத்தி கஞ்சா என்னும் போதைப்பொருட்கள் பேக்கில் உள்ளதா சோதனை செய்ய வேண்டி அவர்களிடம் அருகில் உள்ள நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்பாகவோ உங்களை சோதனை செய்ய 52(1) NDPS Act பிரகாரம் உங்களை சோதனை செய்ய உரிமம் உண்டு என்று கேட்ட போது அதற்கு சந்தேகப்பட்ட எதிரிகள் இருவரும் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்பாகவோ எங்களை சோதனை செய்ய தேவையில்லை என்றும் திருச்சி

போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு அதிகாரி ஆகிய நீங்கள் சோதனை செய்தால் போதும் என்று சொன்னவுடன் பின்பு அருகில் நின்ற பொதுமக்களை சந்தேக எதிரிகள் கொண்டுவந்த பேக்கை சோதனை செய்ய சாட்சியாக இருக்க கேட்ட போது யாரும் முன்வராததால் 5.55 மணி முதல் 6.00 மணி வரை எதிரிகளிடம் சோதனை நடத்தினேன். மு.நி.கா அழகேசன் மற்றும் காவலர் திரு.பிரபு ஆகியோர்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டு சந்தேக எதிரி மாரியப்பன் என்பவர் கொண்டு வந்த சோல்டர் பேக்கை சோதனை செய்த போது காக்கி கலர் டேப்பால் சுற்றபட்ட 2 பொட்டலங்களும் இருந்தது. மற்றொரு நபரான முத்துக்குமார் என்பவர் கொண்டு வந்த சோதனை பேக்கை சோதனை செய்த போது கருப்பு கலர் பேக்கால் சுற்றப்பட்ட 6 பொட்டங்கள் இருந்தது.பின்பு நாங்கள் கொண்டு சென்ற எடை மிசினை வைத்து எடை பார்த்த போது தலா 8 பொட்டங்கள் அதில் தலா ஒவ்வொரு பொட்டலத்திலும் தலா 2 கிலோ எடை இருந்தது.பின்பு 8 பொட்டலங்களையும் பிரித்து பார்த்த போது இலை,தளையுடன் கூடிய தாவரப்பொருள் இருந்தது. அதில் சிறிதளவு எடுத்து தீ வைத்து பார்த்தபோது கஞ்சா நெடி வீசியது.பின்பு 8 பொட்டலத்தில் இருந்த கஞ்சாவை நாங்கள் கொண்டு சென்ற வெள்ளை நிற உரசாக்கு பையில் போட்டு சணலால் கட்டி முடிச்சி NIBCID சீல் வைத்து P1 என குறியீடு செய்தேன்.பின்பு சந்தேக நபர்கள் இருவரையும் மற்றும் 6.00மணி முதல் 6.10 மணி வரை சோதனை செய்தபோது மாரிமுத்து என்பவரிடம் 6.10 மணி முதல் 7.10 மணி வரை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். நோக்கியோ போன் மற்றும் ரயில் பயண டிக்கெட் மற்றும் மற்ற சந்தேக எதிரி முத்துகுமாரிடம் Vivo செல்போன் ஒன்று கைப்பற்றினோம்.பின்பு சந்தேக எதிரி மாரியப்பன் என்பவரிடம் கைப்பற்றிய

சொத்துகளான  நோக்கியோ போனை P2 என குறியீடு செய்தும் ரயில் பயண டிக்கெட் P3 என குறியீடு செய்தும் எதிரி கஞ்சா கடத்தி வருவதற்கு பயன்படுத்திய கருப்பு நிற சோல்டர் பேக்கை P4 என குறியீடு செய்தேன்.கஞ்சா கொண்டு வந்த காக்கி கலர் கவரை P5 என குறியீடு செய்தேன். சந்தேக எதிரி 6.10 மணி முதல் 7.10 மணி வரை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.சந்தேக எதிரி முத்துகுமார் கொண்டு வந்த Vivo செல்போனை கைப்பற்றி P6 என குறியீடு செய்தேன். சந்தேக எதிரி முத்துகுமார் கொண்டு வந்த சோல்டர் பேக்கை  கைப்பற்றி P7 என குறியீடு செய்தேன். காக்கி கலர் கவர்களை P8,  P9 என குறியீடு செய்தேன்.சந்தேக எதிரி 7.10 மணி முதல் 8.10 மணி வரை கைப்பற்றுதல் மகஜரில் சந்தேக எதிரி முத்துகுமாரிடம் கைப்பற்றினேன்.பின்பு இரண்டு நபர்களையும் காரணம் கூறி 8.10 மணிக்கு கைது செய்தேன்.8.10 மணி முதல் 8.40 வரை கைது குறிப்பாணை மூலம் மாரிமுத்து என்பவருக்கு சொந்த அண்ணன் ராஜுகுமார் என்பவரிடமும் , 8.10 மணிக்கு கைது செய்தேன்.8.40 மணி முதல் 9.10 வரை கைது குறிப்பாணை மூலம் முத்துகுமார் என்பவருடைய தந்தை திருகுடையார் என்பவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன்.மாரிமுத்து என்பவரிடம் துன்புறுத்துதலோ அச்சுறுத்தலோ இல்லாமல் 9.10 முதல் 10.10 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன்.பின்பு முத்துக்குமார் என்பவரிடம் துன்புறுத்துதலோ அச்சுறுத்தலோ இல்லாமல் தானாக முன்வந்து கொடுத்ததை 10.10 முதல் 11.10 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன்.பின்பு 2 எதிரிகளுடன் சொத்துகளுடன் நிலையம் சென்று நிலைய குற்ற எண் 1/2024 சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B)  of NDPS Act- வழக்கு பதிவு செய்தேன். முன் தகவல் **அ.த.சா.ஆ 9** ஆக குறியீடு

செய்யபடுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ 10** ஆக குறியீடு செய்யபடுகிறது. பிரிவு 57 படிக்கான அறிக்கையை எனது மேல் அதிகாரியான ஆய்வாளருக்கு சமர்பித்தேன். அந்த விரிவான அறிக்கை **அ.த.சா.ஆ 11** ஆக குறியீடு செய்யபடுகிறது.பின்னர் இவ்வழக்கின் ஆய்வாளரான திரு.ரமேஷ் அவர்களிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன்.ஆய்வாளர் ரமேஷ் தற்போது சேலம் மாவட்டத்தில் பணி மாறுதலில் சென்றுவிட்டார் . அவருடைய கையெழுத்து எனக்கு உடன் பணியாற்றிய வகைக்கு தெரியும்.அவர் இவ்வழககில் மேற்கொகண்ட புலன் விசாரணை பொறுத்து ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். அவர் இவ்வழக்கில் 1 – 7 சாட்சிகளை விசாரித்தும் வாக்கு்மூலங்கள் பதிவு செய்துள்ளார்.மேலும் தடய சொத்தினை படிவம் எண் 95 ன் படி நீதிமன்றத்தில் ஒப்படைத்தும் நீதிமன்றத்தின் மூலம் மாதிரிக்கு எடுத்த தாவரபொருளை திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பகுப்பாய்விற்காக ஒப்படைத்தும் பகுப்பாய்வு அறிக்கையினை பெற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த பகுப்பாய்வு அறிக்கை **அ.த.சா.ஆ 12** ஆக குறியீடு செய்யபடுகிறது.படிவம் 95 **அ.த.சா.ஆ 13** ஆக குறியீடு செய்யபடுகிறது.வழக்கு சொத்தானது crlmp 4389/24 படி 12.08.2024 அழித்தல் குழுமம் மூலமாக அழிக்கபட்டது.கைப்பற்றபட்ட சொத்துகள் செல்போன் ,ரயில் டிக்கெட் , பேக் ,Vivo ஆண்ராய்டு செல் ஆகியவை முறையே **சா.பொ. 1முதல் 4** ஆக குறியீடு செய்யபடுகிறது.எதிரிகள் மீது 30.03.2024 தேதி இறுதி அறிக்கை முடித்து குற்றபத்திரிக்கை நீதிமன்றத்திற்கு சமர்பித்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சோதனை சம்மத கடிதத்தில் அரசிதழ் பெற்ற அதிகாரியிடமோ

அல்லது நீதித்துறை நடுவர் முன்பாகவோ சோதனை செய்ய எதிரியாகிய உமக்கு உரிமை உள்ளது என்ற விவரத்தை சரிவர எடுத்து சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சோதனை சம்மத கடிதங்கள் பிரிண்ட் பார்மெட்டில் பேனா மையால் பூர்த்தி செய்யபட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பிரிண்ட் பார்மெட்டில் உள்ள படிவங்களில் சம்பவ இடத்திற்கு சென்று யார் பெயரை வேண்டுமானாலும் நிரப்பி கொள்ளலாம் என்று சொன்னால் சரிதான். ஆய்வு நமுனாவில் பொதுவாக எதிரியை கைது செய்யும்போது அவர்களது உறவினர்களுக்கு எப்படி தகவல் சொல்வோம் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.கைப்பற்றுதல் மகஜர்களில் SHO சீல் வைக்கபடவில்லை என்று சொன்னால் சரிதான்.நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் சிறப்பு சார்பு ஆய்வாளருடன் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரிகளுக்கும் வழக்கு சொத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் எதிரிகளிடம் இருந்து கஞ்சா எதுவும் கைப்பற்றபடவில்லை என்றும் எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் அதற்காக வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டும் மேற்படி ஆவணங்களில் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.1வது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களுக்கு தகுந்தார் போல் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன்.என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யபடவில்லை என்றும் வீட்டில் இருந்த நபரை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையம் அழைத்து சென்று பொய்யாக வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது என்றும் , உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன்.என்று சொன்னால் சரியல்ல. படிவம் எண் 95 25 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கபட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் கஞ்சா எங்கிருந்தது என்றால் மல்கானாவில் இருந்தது. மல்கானா குடோனில் இருந்தது என்பதை காட்டகூடிய மல்கானா Register ஆவணம் எதுவும்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த காலதாமதிற்கு சிறப்பு காரணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.NDPS வழக்குகளில் கஞ்சா பிடிபட்ட 48 மணி நேரத்தில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கபட வேண்டும் என்ற சட்ட விதிமுறையை பின்பற்றபடவில்லை என்றால் சரிதான். வழக்கை முறையாக புலன்விசாரணை செய்யாமல் அவசர கதியில் புள்ளி விவர கணக்குகாக போடபட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எனக்கு தகவல் வந்ததாகவும் ஆய்வாளர் அவர்களிடம் அனுமதி பெற்றதாக சொல்வது பொய் என்றும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரிக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும் எதிரியிடம் இருந்து கஞ்சா எதுவும் கைப்பற்றபடவில்லை என்றும் எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் அதற்காக வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டும் மேற்படி ஆவணங்களில் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போதை பொருள் சட்ட விதிமுறைகளை கடைபிடிக்காமல் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரிவு 57 படியான அறிக்கை என்னால் உரிய நேரத்தில் தயாரிக்கபட்டதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.எதிரிக்கும் கைப்பற்றபட்டதாக சொல்லபடும் கஞ்சாவிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.